# பாகம் - I

# இந்துச் சட்டம்

# (HINDU LAW)

## இனமுறைச் சட்டங்கள்

**(PERSONAL LAWS)**

**நபர்கள், மூலங்கள், பள்ளிகள், திருமணம், தத்தெடுப்பு, காப்புரிமை, பராமரிப்பு போன்றவைகள்**

**(PERSONS, SOURCES, SCHOOLS, MARRIAGE, ADOPTION, GUARDIANSHIP, MAINTENANCE ETC.,)**



# பகுதி—I

**(SECTION – I )**

## இந்து சட்டத்தின் நபர்கள், மூலங்கள் மற்றும் பள்ளிகள்

**(PERSONS, SOURCES & SCHOOLS OF HINDU LAW)**

## 1. இந்து சட்டத்தால் ஆளுகை செய்யப்படும் நபர்கள்

**(இதர மதங்களுக்கு மாறுவதன் விளைவு)**

**(PERSONS GOVERNED BY HINDU LAW)**

**(EFFECT OF CONVERSION TO OTHER RELIGIONS)**

பாடசுருக்கம் : **(SYNOPSIS)**

அ. “இந்துக்கள்” என்பதின் அர்த்தம்

ஆ. இந்து சட்டத்தினால் ஆளப்படுபவர்கள்

இ. இந்து சட்டத்தினால் ஆளப்படாதவர்கள்

ஈ. மதமாற்றத்தின் விளைவு

### அ. “இந்துக்கள்” என்பதின் அர்த்தம்:

**(MEANING OF “HINDUS”)**

சரித்திரப்படி “இந்து” என்ற சொல் வெளி நாட்டிலிருந்து வந்ததாகும். “இந்து” என்ற சொல், தற்போது “இன்டஸ்“ ஆறு என அழைக்கப்படும் சிந்து நதிக்கரையின் கிழக்குப் பகுதியில் வசித்து வந்த மக்களைக் குறிக்கும் சொல். இலக்கணப்படி இந்து என்ற சொல் இந்தியாவில் வசிக்கும் அனைவருக்கும் ஜாதி மத, வேறுபாடின்றி பொருந்தியது, ஆனால், நாளடைவில் மதத்தை குறிக்கும் சொல்லாக அது மாறியது.

அதன்படி தற்போது இந்து என்ற சொல் பிறப்பால் இந்துக்களாக இருப்பவரையும் நம்பிக்கையின் பேரில் இந்துக்களாக இருப்பவரையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இதுவே இந்து சட்டத்தை செயல்படுத்துவதற்கான அடிப்படை ஆகும்.

காமாவதி எதிர் திக் விஜய் (Kamavathi Vs. Dighvijai) வழக்கில் இந்து மரபுரிமைச்சட்டத்தில் இந்து என்ற சொல் சமய நோக்கத்திலேயே பயன்படுத்தப்படுகிறது என்றும் அதனால் பிறப்பால் இந்துவாக இல்லா எந்த நபரும் மதமாற்றத்தின் மூலம் இந்துவாக முடியும் என்றும் பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது.

மேலும், இந்து பழக்க வழக்கங்களை மதிப்பதாலோ அல்லது ஏற்றுக்கொள்வதாலோ மட்டும் ஒரு நபர் இந்துவாகி விடமுடியாது. தன் பிறவியில் அனுசரித்த மதத்தை துறந்து இந்து மதத்தை தழுவி இந்து மத வாழ்க்கை முறையை கடைபிடித்தால் மட்டுமே ஒருவர் இந்துவாக முடியும்.

ரடௌசி எதிர் சென்னை தலைமை ஆட்சியாளர்:
***(Rateausi vs. Administrator General of Madras)***

இவ்வழக்கில் நீதிமன்றம், இந்துவாக மாறிய நபருக்கு சாதி எதுவும் கிடையாது. அதன்படி இந்துவாக இருப்பதற்கு ஒரு சாதியின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது என்று தீர்ப்பளித்தது.

ஜைனர்கள் மற்றும் சீக்கியர்கள் இந்துமதத்திலிருந்து பிரிந்து சென்றவர்கள்தான். மாறுபடும் சில வழக்கங்களில் தவிர இதர வகைகளில் இந்துச்சட்டம் அவர்களை கட்டுப்படுத்தும். ஒருவன் தான் இந்து இல்லை என்று அறிவிப்பதன் மூலம் தனக்கு பொருந்தக்கூடிய மரபுரிமைச் சட்டத்தை அவர் மாற்றிவிட முடியாது.



ஆ. இந்து சட்டத்தினால் ஆளப்படுபவர்கள்:
**(PERSONS GOVERNED BY HINDU LAW)**

கீழ்வரும் நபர்கள் இந்து சட்டத்தினால் ஆளப்படுபவர்கள்:

1. பிறப்பின் மூலம் இந்து: **(A Hindu by birth)**

பெற்றோர்கள் இருவரும் இந்துவாக இருந்தால் அவர்களின் (சட்டப்பூர்வ மற்றும் சட்டப்பூர்வமற்ற) குழந்தைகளும் இந்துவாகி விடுகிறார்கள்.

2. நம்பிக்கையின் பேரில் இந்து அல்லது இந்துவாக மதமாற்றம்: **(A Hindu by faith or conversion to hinduism)**

முற்காலத்தில் 'ஒரு இந்து என்பவன் பிறக்கிறான், அவன் உருவாக்கப்படுவதில்லை' என்று நம்பினர். ஆனால் தற்போது இந்து மதத்திற்கு மாறிய ஒருவரும் இந்துவாக கருதப்படுகிறார் என்பது தான் உண்மை. (ஆப்ரஹாம் எதிர் ஆப்ரஹாம்) (Abraham Vs. Abraham)

சொத்து வரி ஆணையாளர் எதிர் ஸ்ரீதரன்:
***(Commissioner of wealth tax Vs. Sridharan)***

சிறப்பு திருமணச் சட்டம் 1954 ன் கீழ் திருமணம் செய்துகொண்ட ஒரு இந்து ஆணிற்கும் ஒரு கிறிஸ்தவப் பெண்ணிற்கும் பிறந்த மகன் இந்து தான் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஏனென்றால், அம்மகனும் தந்தையும் பிரிவுறாத இந்து குடும்பத்தின் அங்கத்தினராக உள்ளதை நிரூபித்து தந்தையும் மகனும் ஒரு பிரியாத இந்து குடும்பத்தை உருவாக்கியுள்ளார்கள். இதை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, மகன் இந்து தான் என தீர்ப்பளித்தது.

3. இந்து பெற்றோர்களுக்கு (இரண்டு பெற்றோர்களும்) பிறந்த சட்டபூர்வமற்ற குழந்தை இந்து சட்டத்திற்குட்பட்டதாகும்.

4. கிறிஸ்தவ தந்தைக்கும் மற்றும் இந்து தாய்க்கும் பிறந்து இந்துவாக வளர்க்கப்பட்ட சட்டபூர்வமற்ற குழந்தைகள்.

5. ஜெயின், சீக்கியர், புத்த மதத்தவர், லிங்காயத்துகள், பிரம்மோக்கள், ஆரிய சமாஜத்தவர் மற்றும் சோட்டா நாக்புரியை சேர்ந்த சாந்தல்கள் வழக்கத்தால் வேறுபடாத பட்சத்தில் இந்து சட்டத்தினால் ஆளுகை செய்யப்படுவார்கள்.

6. இந்துவாக பிறந்தவர் மற்றும் இந்து மதத்தை துறந்து பின் மீண்டும் இந்து மதத்திற்கு மாறியவர். இந்துமத சடங்குகளினாலோ அல்லது சமூகத்திலிருந்து கிடைக்கும் அங்கீகாரத்தினாலும் இருக்கலாம்.

7. முகமதியராக மதமாற்றம் செய்யப்பட்ட இந்து நாட்டியப்பெண்களின் மகன்கள். அம்மகன்களின் இந்து தாத்தா, பாட்டிகளால் இந்துவாக வளர்த்துவரப்பட்ட அம்மகன்கள்.

8. சிறப்பு திருமணச் சட்டம் 1872-ன் நோக்கத்திற்காக தாங்கள் இந்துக்கள் அல்ல என அறிவிப்பு வெளியிட்ட இந்துக்கள் இந்து சட்டத்தினால் ஆளுகை செய்யப்படுவர்.

இ. இந்து சட்டத்தினால் ஆளப்படாதவர்கள்:
**(PERSONS NOT GOVERNED BY HINDU LAW)**

1. இந்து தந்தைக்கும் ஒரு கிறிஸ்தவ தாய்க்கும் பிறந்து ஒரு கிறிஸ்தவனாக வளர்க்கப்பட்ட முறையிலா மணபிறப்பு மகன்.

2. ஒரு இந்து தந்தைக்கும் ஒரு முகமதிய தாய்க்கும் பிறந்த முறையிலா மணபிறப்பு குழந்தைகள்.

3. இந்து மதத்திலிருந்து இஸ்லாமிய மதத்திற்கு மாறியவர்கள்.

4. இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள்.

5. இந்து மரபுரிமை சட்டப்படி ஆளப்படாமல், இந்திய மரபுரிமை



சட்டப்படி ஆளப்பட்டு, மரபுரிமை பெறுவதற்காக சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொள்ளும் ஒரு இந்து.

ஈ. மதமாற்றத்தின் விளைவு:
**(EFFECT OF CONVERSION)**

**I.** இந்து சட்டம் பொருந்தும் தன்மை:
**(APPLICABLITY OF HINDU LAW)**

**i.** கிறிஸ்தவராக மாறிய ஒரு இந்து : **(Christianity)**

a. இந்திய மரபுரிமைச்சட்டம் 1925-க்கு முன்பு கிறிஸ்தவராக மாறிய ஒரு இந்து, இந்து சமயத்தை தழுவி இந்து தனிச் சட்டங்களை ஏற்றுக் கொண்டிருந்தால், அவருக்கு இந்துச் சட்டங்கள் பொருந்தும்.

ஆப்ரஹாம் எதிர் ஆப்ரஹாம்: ***(Abraham Vs. Abraham)***

மாத்யு ஆப்ரஹாம் என்ற ஒரு இந்து ஒரு கிழக்கிந்திய கிறிஸ்தவ பெண்ணை மணந்தார். ஆங்கிலேயர் போல அவர்கள் வாழ்ந்து வந்தனர். ஒரு கைம்பெண் மனைவி, ஒரு மகன் மற்றும் அவரது சகோதரரை விட்டுவிட்டு ஆப்ரஹாம் இறந்து விட்டார்.

இந்து கூட்டு குடும்பத்தின் ஒரு பங்குரிமையாளர் என்ற முறையில் அவரது சகோதரர் தொடுத்த வழக்கில் கைம்பெண்ணும் அவளது மகனும் மரபுரிமையாக சொத்தினை பெறமுடியும் என பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது. ஏனெனில் மாத்யு ஆப்ரஹாம் ஒரு ஆங்கிலேயர் போல வாழ்ந்தார். இந்து மதத்தினை மேற்கொள்வதாக அவர் காட்டவில்லை என்று கூறியது.

b. இந்திய மரபுரிமைச்சட்டம் இயற்றப்பட்டபிறகு இந்துவாக இருந்து கிறிஸ்தவராக மாறியவரை இச்சட்டம் கட்டுப்படுத்தும்.

**ii.** முகம்மதியராக மாறிய ஒரு இந்து: **(Mohammadanism)**

முகம்மதியராக மாறிய ஒரு இந்துவுக்கு இந்து தனிப்பட்ட சட்டத்தை வைத்துக் கொள்ள விருப்புரிமை கிடையாது. அவரை முஸ்லிம் தனிச்சட்டம் கட்டுப்படுத்தும்.

**iii.** மற்ற மதங்களிலிருந்து இந்துவாக மாறியவர் : **(Hinduism)**

மற்ற மதங்களிலிருந்து இந்துவாக மாறியவருக்கு எந்த சாதியும் கிடையாது. ஆனால் அவர் இந்து நம்பிக்கையை வெளிக்காட்டிக் கொண்டால் அதுவே இந்துச் சட்டத்தை செயல்படுத்துவதற்கு போதுமானதாகும்.

**II.** மரபுரிமையில் மதமாற்றத்தால் விளைவு **:**
**(EFFECT OF CONVERSION ON INHERITANCE RIGHTS)**

முன்காலத்தில் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறிய ஒருவர், தான் இருந்த மதத்தின் மூலம் கிடைக்கும் சொத்துக்களை பெற முடியாது. ஆனால் சாதி இயலாமைகள் நீக்குதல் சட்டம் 1850 (Caste Disabilities Removal Act) மேற்கூறிய தடையினை நீக்கியது.

**III.** திருமண உரிமைகளில் மதமாற்றத்தால் விளைவு **:**
**(EFFECT OF CONVERSION ON MARITAL RIGHTS)**

இந்து திருமணச்சட்டம் 1956-ன் கீழ், வாழ்க்கைத் துணைகள் இருவரில் ஒருவர் வேறு மதத்திற்கு மாறினால் மற்றவர் மணமுறிவு கோர முடியும்.

**IV.** பராமரிப்பு உரிமையில் மதமாற்றத்தின் விளைவு **:**
**(EFFECT OF CONVERSION ON RIGHT TO MAINTENANCE)**

இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறிய ஒரு வாழ்க்கைத் துணை வாழ்க்கைப் பொருளுதவி கோர முடியாது. இருப்பினும் ஒரு இந்து கணவன் இந்து மதத்தை துறந்தால், அவனுடைய இந்து மனைவி தன் கணவனிடமிருந்து தனியாக வாழ வாழ்க்கைப் பொருளுதவி கேட்க முடியும்.



காம்பாட்டா எதிர் காம்பாட்டா:
***(Khambatta vs. Khambatta)***

திருமணத்தில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவர் இஸ்லாமியராக மதம் மாறினாலும், இந்து திருமணச்சட்டம் பிரிவு 13-ன் கீழ் மற்றவர் நிவாரணம் பெற உரிமையுடையவராகிறார்.

ஆனால் இந்த வழக்கில் இரண்டு தரப்பினரும் இஸ்லாமிற்கு மதம் மாறியிருந்தால் முகம்மதிய சட்டத்தின் கீழ் தலாக் வழிமுறையில் விவாகரத்து செய்யப்படலாம் என கூறப்பட்டது.

**V.** காப்பாண்மையில் மதமாற்றத்தின் விளைவுகள்:
**(EFFECT OF CONVERSION ON RIGHT OF GUARDIANSHIP)**

ஒரு காப்பாளர் தனது மதத்தை மாற்றும் பொழுது, அவரால் இளவருக்கு காப்பாளராக செயல்பட முடியாது.

காப்பாண்மையில் பெற்றோரின் மதமாற்றத்தின் விளைவுகள்:
***(Effect of parent's conversion on the guardianship)***

ஒரு 14 வயது இளவர் பெண்ணை ஒரு விதவைத் தாய் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அந்த விதவை தாய் ஒரு முகம்மதியராக மதம் மாறினார். தன்னுடைய கிறித்துவ மனைவியை ஒதுக்கிவிட்டு ஒரு முகம்மதியராக மதம் மாறிய கிறித்துவருடன் அந்த விதவை தாய் வாழத் தொடங்கினார்.

அந்த விதவைத் தாய் தன் மகளை இஸ்லாம் மதத்திற்கு மாறுவதற்கு மனதை மாற்றினார். எனவே அந்த மகளின் இறந்து போன தந்தையின் உறவினர் ஒருவர் காப்பாளர் பதவியிலிருந்து அந்த தாயை விலக்குவதற்கு மனு செய்தார்.

இளவர் மகள் தன்னுடைய தாயுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும் மற்றும் இஸ்லாமிற்கு மதம் மாற விரும்புவதாகவும் தெரிவித்தாள்.

அத்தகைய சூழ்நிலை அந்த இளவர் மகளின் நலத்திற்கு உகந்ததல்ல என்று கருதிய நீதிமன்றம் ஒரு கிறித்துவ காப்பாளரை நியமித்து அந்த இளவல் மகளை அவரது கட்டுப்பாட்டின் கீழ் வைத்தது.

சாதாரணமாக ஒரு இளவர் குழந்தை அவளுடைய தந்தையின் மத வழியிலேயே வளர்க்கப்பட வேண்டும் என பிரிவி கவுன்சில் கருதியது.

ஒரு காப்பாளர் வேறு மதத்திற்கு மதம் மாறினால், உரிமை வயது வராத நபருக்கு அவர் காப்பாளராக செயல்பட முடியாது என்று இவ்வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**முந்தைய பல்கலைக்கழக வினாக்கள்:**

1. இந்துச் சட்டம் யார் யாருக்குப் பொருந்தும் என்பதை விளக்குக.
2. “இந்துக்கள்” என்றால் யார்? இந்து சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படும் நபர்கள் யார் என்பதைக் குறிப்பிடுக.
3. இந்து சட்டத்தினை செயல்படுத்துவதில் “மதமாறுதலின்” விளைவு என்ன?
4. இந்துக்கள் என்பவர் யார்? இந்து சமயத்திற்கு மாறியவர்கள் மற்றும் மீண்டும் மாறியவர்களுக்கு இந்து சட்டம் பொருந்துமா?
5. “பிறப்பாலும் மற்றும் சமயத்தினாலும் இந்துக்களாக உள்ளவர்களுக்கு இந்து சட்டம் பொருந்தும்” - கருத்துரைக்க.
6. இந்து என்பவர் யார்? பிரபல வழக்குகளின் மூலம் விளக்குக.
7. இந்து சட்டத்தினால் ஆளப்படும் நபர்கள் யார்? எவர் மீது இந்து சட்டத்தை செயல்படுத்த முடியாது? விளக்குக.

☆ ☆ ☆